**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 150/2025**

**Prosecution witness : அ.சா. 7** **Date : 13.06.2025**

| | |
|---|---|
| **Name : சுரேந்தர்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தற்போது மேட்டூர் அரசு மருத்துவமனையில் முதுநிலை உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.02.2025ம் தேதியன்று மாலை 05.30 மணியளவில் மேட்டூர் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது, திரு.தங்கவேல் வயது 37, த/பெ மாது என்பவர் தனியார் ஆம்புலன்ஸ் மூலமாக சிசிச்சைக்காக அழைத்துவந்தார்.

2) அவர் என்னிடம் கடந்த 02.02.2025 –ம் தேதி மாலை 4 மணிளவில் அடையாளம் தெரிந்த மூன்று நபர்கள் தன்னை கட்டை மற்றும் கற்கலால் தாக்கி ஏற்பட்டதாக கூறினார். அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் 1) 2x2 cm வலது பக்க தலையில் சிராய்ப்பு காயம். மேலும் அவருக்கு சிகிச்சை அளித்து உள்நோயாளி பிரிவில் அனுமதித்து சிகிச்சை அளிக்கப்பட்டது.

3) மேலும் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சொற்பகாயங்கள் என்றுதான் சான்றளிக்கப்பட்டது. **மேற்படி காயச்சான்று அ.சா.ஆ.4** போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

4) தனியார் ஆம்புலன்ஸ் மூலமாக அவரது மனைவி தங்கவேலு என்பவரை அழைத்து வந்தார். நான் சிகிச்சைக்கு வந்த உடனே சிகிச்சையை தொடங்கினேன். காவல் உதவி ஆய்வாளர் எந்த தேதியில், எத்தனை மணிக்கு விசாரணை செய்தார் என்றால் நினைவில்லை. ஒருவர் தவறுதலாக கீழே விழுந்து கூர்மையான பொருள் மீது பட்டால் மேற்படி நபருக்கு ஏற்பட்ட காயம் போல் காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் வாய்ப்புள்ளது.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2

மேட்டூர்.